# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL)
## 2008 / 2009 HELD IN AUGUST - 2009

## PSC 2.11 – CONSTITUTIONAL DEVELOPMENT IN SRI LANKA

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. “இலங்கை வாழ் அனைத்து சமூகங்களதும் அபிலாஷைகளை உள்வாங்காத காரணத்தினாலேயே சுதந்திர இலங்கையின் அரசியல் அமைப்புக்கள் சர்ச்சைகளை உருவாக்கியுள்ளன.” இக்கூற்றின் பொருத்தப்பாட்டை பரிசீலிக்குக.

02. இலங்கையின் சுதந்திரத்திற்கான பாதையில் ‘இலங்கை தேசிய காங்கிரசின்’ பங்களிப்பு தொடர்பான வாதப் பிரதிவாதங்களை அடையாளப்படுத்துக.

03. டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதனால் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், சமூகப் பொருளாதார மாற்றங்கள் குறித்து கட்டுரையொன்று எழுதுக.

04. சோல்பரி யாப்பினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) 29 (2) ABCD உறுப்புரை
(ஆ) மகாதேசாதிபதி
(இ) செனட்சபை

05. “முதலாம் குடியரசு அரசியல் யாப்பு சோல்பரி அரசியல் யாப்பில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்தவற்காகவே உருவாக்கப்பட்டதாகும்.” விமர்சிக்குக.

அல்லது

1972 ம் ஆண்டின் அரசியல் அமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய அரசுப் பேரவை (NSA) வகித்த இடம், அதிகாரம், கடமை என்பவற்றை இன்றைய பாராளுமன்றத்தோடு ஒப்பிட்டு வேறுபடுத்துக.

06. 1978 ம் ஆண்டைய இரண்டாம் குடியரசு அரசியல் திட்டத்தில் பின்வருவன பற்றி விளக்குக.

(அ) சனாதிபதி தெரிவு முறையும் பதவி நீக்கமும்
(ஆ) விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் குறைபாடுகள்
(இ) நீதித்துறையின் சுதந்திரத்தன்மை

07. இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சியில் புதியதோர் யாப்பை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதில் தற்போது காணப்படும் இடர்பாடுகளை நுணுக்கமாக விபரிக்குக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(அ) அரசியல் அமைப்பின் 17வது சீர்திருத்தம்
(ஆ) இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கான சர்வகட்சி மன்ற மாநாடு
(இ) இலங்கையில் அரசியல் கட்சி முறைமை
(ஈ) 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் கீழ் மக்கள் தீர்ப்பு

***